# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1875/39 - 2014 අගෝස්තු මස 15 වැනි සිකුරාදා - 2014.08.15

*1875/39 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**அரச சேவையின் மோட்டார் வாகன சாரதிகளுக்கான இணைந்த சாரதிகள் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு**

*1999 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதிய 1101/9 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் வெளியிடப்பட்ட 1999 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் அரச சேவையின் மோட்டார் வாகன சாரதிகளுக்கான இணைந்த சாரதிகள் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் காலத்துக்குக்காலம் அதில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட அல்லது அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் எனக் கருதப்படும் ஏதேனும் நடைமுறை ஒன்றிற்கு பாதிப்பு ஏற்படாதவகையில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அரச சேவையின் மோட்டார் வாகன சாரதிகளுக்கான இணைந்த சாரதிகள் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பதிலீடு செய்யப்படுகின்றது.*

*அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,*

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,<br>
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,<br>
பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

*கொழும்பு,*<br>
*2014, ஓகத்து 15.*

1. **நடைமுறைக்கு வரும் திகதி** : *இச்சேவைப் பிரமாணக்குறிப்பு 2013.07.01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.*

2. **நியமன அதிகாரி** :<br>
*இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.*<br>
*முறையான நியமனக் கடிதங்கள் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படும்.*

3. **சேவை வகை** : *ஆரம்ப திறன் சேவை வகை.*



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. **ஒப்படைக்கப்படும் பணிகள் :** நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்படும் பணிகளை நிறைவேற்றுதல் மற்றும் பேணல் என்பவற்றுக்காக தேவைப்படும் போக்குவரத்துப் பணிகளை நிறைவேற்றுவதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரால் வழங்கப்படும் மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தைக் கொண்ட ஆட்களை உள்ளடக்கிய சேவை வகையாகும்.

4.1 பணிகளை ஒப்படைத்தல் : தரப்படுத்தப்பட்ட பணிகள் ஒப்படைக்கப்படாததோடு இச்சேவை வகைக்கு ஒப்படைக்கப்படும் பணிகளிலிருந்து எந்தவொரு பணியினையும் சேவையின் தேவைப்பாட்டின் கீழ் சேவை மூப்பு மற்றும் திறன் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு எந்தவொரு தரத்திலுமுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு திணைக்களத் தலைவரினால் ஒப்படைக்கப்படலாம்.

5. **சம்பளம் :**

5.1 சம்பள குறியீட்டு இலக்கம் : (PL 3 - 2006 A)

5.2 சம்பள அளவுத் திட்டம் : (ரூபா 12,470- 10x 130- 10x 145 - 10x 160- 12x 170 - 18,860 )

5.3 தரம் முறைக்கு உரிய ஆரம்பச் சம்பளப்படிமுறை.

| தரம் | ஆரம்ப சம்பளப்படிமுறை | ஆரம்ப சம்பள படிநிலை ரூபா |
|---|---|---|
| III | 01 ஆம் படிமுறை | 12,470 |
| II | 12 ஆம் படிமுறை | 13,915 |
| I | 22 ஆம் படிமுறை | 15,380 |
| விசேட தரம் | 32 ஆம் படிமுறை | 16,990 |

6. **சேவைக்கு உரித்தான பதவிகள் :**

6.1 அனுமதிக்கப்பட்ட பதவிகளின் பெயர்கள் : பதவிகள் அனுமதிக்கப்பட்ட தரங்கள் : சாரதிகள் III, II, I மற்றும் விசேட.

6.2 மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை - 5831
தரம் ஒன்றிலிருந்து இன்னொரு தரத்திற்கு பதவியுயர்வு மேற்கொள்வதற்கான III, II, I மற்றும் விசேட சகல தரங்களும் மொத்தப் பதவிகளின் எண்ணிக்கைக்கு உரியதாகக் கருதப்படும்.

6.3 சேவையிலுள்ள பதவியின்/பதவிகளின் தன்மை - நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

7. **ஆட்சேர்ப்பு முறை :**

7.1 ஆட்சேர்ப்பு விகிதம் :

| முறை | வீதம் |
|---|---|
| திறந்த | 100% |
| மட்டுப்படுத்தப்பட்ட | - |
| திறன் | - |

7.2 திறந்த ஆட்சேர்ப்பு :

7.2.1 ஆட்சேர்ப்பு செய்யப்படும் தரம் : தரம் III

7.2.2 தகைமைகள் :

7.2.2.1 கல்வித் தகைமைகள் :
கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு சிங்களம்/தமிழ் அடங்கலாக இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல்.

7.2.2.2. தொழிற் தகைமைகள் :

(1) தனியார் அல்லது வாடகை வாகனங்கள் மற்றும் வெற்று எடை 24 அந்தருக்கு குறைவான ஸ்ரேசன் வெகன் வாகனங்களைச் செலுத்துதல் தொடர்பாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகனத்தைச் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றிருத்தல். (ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தினத்திற்கு மூன்று (03) வருடங்களுக்கு முன்னர் குறைந்த பட்சம் சீ மற்றும் சீ 1 வாகன வகுப்பிற்குரிய அனுமதிப்பத்திரத்தை அல்லது புதிய சாரதி அனுமதிப்பத்திரத்திற்கமைய பீ வகுப்பிற்குரிய அனுமதிப்பத்திரம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்).

(2) பெருந்தெருக்கள் சட்டக்கோவை தொடர்பாக போதிய அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7.2.2.3. அனுபவம் :

வாகன சாரதி ஒருவராக மூன்று (03) வருட அனுபவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். (அனுபவத்தினை சான்றிதழ்களின் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.)

7.2.2.4. உடற் தகைமை :

ஆகக்குறைந்த உயரம் 05 அடியாக இருத்தல் வேண்டும்.

பகல் வேளைகளிலும், இரவு வேளைகளிலும் சேவையில் ஈடுபடுவதற்காக உடல் ரீதியான தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டியதோடு போதிய கண்பார்வையினையும் கொண்டிருத்தல் வேண்டும். அரச வைத்திய அலுவலர் ஒருவரினால் வழங்கப்பட்ட முறையான சான்றிதழ் ஒன்றின் மூலம் அவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

7.2.2.5. ஏனைய தகைமைகள் :

(1) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்.
(2) விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.
(3) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான 7.2.2. முதல் 7.2.3. வரையான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்று விண்ணப்பம் கோரும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்படும் திகதியில் அத்தகைமைகளை எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7.2.3. வயது :

7.2.3.1 ஆகக் குறைந்த வயதெல்லை : 18 வயதுக்கு குறையாது இருத்தல் வேண்டும்.
7.2.3.2 ஆகக் கூடிய வயதெல்லை : 45 வயதுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு** : ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.

7.2.4. ஆட்சேர்ப்பு முறை :

தொழிற்றகைமைப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் ஆட்சேர்ப்பு நடைபெறும்.

7.2.4.1 எழுத்துப் பரீட்சை : ஏற்புடையதல்ல.

7.2.4.2 தொழிற்றகைமைப் பரீட்சை

| பாடங்கள் | அதிகபட்ச புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|
| (i) வாகனம் செலுத்துவதிலுள்ள தேர்ச்சி | 40 | 20 |
| (ii) நெடுஞ்சாலை சட்டவிதிகள் தொடர்பான பிரயோக அறிவு | 40 | 20 |
| (iii) மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு | 20 | 10 |

7.2.4.2. 1 நடாத்தும் அதிகாரி :

உரிய அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் அனுமதிக்கப்பட்ட பரீட்சகர் குழு ஒன்றின் மூலம்.

தெரிவுப் பரீட்சையானது கீழே குறிப்பிடப்பட்ட மூன்று பேருக்குக் குறையாத அலுவலர்களைக் கொண்ட நேர்முகப்பரீட்சைச் சபை ஒன்றின் மூலம் நடாத்தப்படுதல் வேண்டும்.

(i) உரிய திணைக்களத்தின் நிறைவேற்றுத்துறை அலுவலர் ஒருவர் ஒரு உறுப்பினராக ;

(ii) மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தின் மோட்டார் வாகன பரிசோதகர் ஒருவர் ;

(iii) பொலிஸ் நெடுஞ்சாலைப் பிரிவின் அலுவலர் ஒருவர்.

7.2.4.3 சாதாரண நேர்முகப் பரீட்சை :
எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் :
ஆட்சேர்ப்பிற்கான அடிப்படைத் தகைமைகளைப் பரீட்சித்தல். புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

7.2.4.3.1 சாதாரண நேர்முகப் பரீட்சை சபையினை நியமிக்கும் அதிகாரி : உரிய அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

7.2.4.4 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை : ஏற்புடையதல்ல.

7.2.5 விண்ணப்பங்கள் கோரப்படும் முறை :

அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் அறிவித்தல்களைப் பிரசுரித்தல் அல்லது பகிரங்க அறிவித்தல்களைப் பிரசுரித்தல் மற்றும் இணையத்தளத்தில் அறிவித்தல்களைப் பிரசுரித்தல்.

7.3 மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு : ஏற்புடையதல்ல

7.4 திறன் அடிப்படையிலான ஆட்சேர்ப்பு : ஏற்புடையதல்ல.

8. வினைத்திறன் தடைதாண்டல் :

8.1

| எந்த வினைத்திறன் தடைதாண்டல் என்பது பற்றி | எத்தனை வருடங்களிற்குள் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும் | வினைத்திறன் தடை தாண்டலின் தன்மை எழுத்து/தொழில்சார் பரீட்சை/சான்றிதழ் பாடநெறி /வேறு |
|---|---|---|
| 1 ஆம் வினைத்திறன் தடை தாண்டல் | III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று வருடங்கள் (03) பூர்த்தியாவதற்குள் | திறன்கள் தொடர்பான பிரயோகப் பரீட்சை மற்றும் வாய்மொழிமூலப் பரீட்சை (பின்னிணைப்பு 01) |
| 2 ஆம் வினைத்திறன் தடை தாண்டல் | II ஆம் தரத்திற்கு தரமுயர்வு பெற்று மூன்று வருடங்கள் (03) பூர்த்தியாவதற்குள் | திறன்கள் தொடர்பான பிரயோகப் பரீட்சை (பின்னிணைப்பு 02) |
| 3 ஆம் வினைத்திறன் தடை தாண்டல் | I ஆம் தரத்திற்கு தரமுயர்வு பெற்று ஐந்து வருடங்கள் (05) பூர்த்தியாவதற்குள் | திறன்கள் தொடர்பான பிரயோகப் பரீட்சை (பின்னிணைப்பு 03) |

8.2 வினைத்திறன்காண் பரீட்சை எவ்வளவு காலத்துக்கு ஒருமுறை நடாத்தப்படும் : வருடத்தில் இரு தடவைகள் :

8. 3 வினைத்திறன் தடைதாண்டலுக்குரிய பரீட்சைகளை நடாத்தும் அதிகாரிகளாவன : இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட பரீட்சிப்புச் சபை

9. **மொழித் தேர்ச்சி** :

| மொழி | பெறவேண்டிய தேர்ச்சி |
|---|---|
| அரச கருமமொழி | அரச கருமமொழியல்லாத மொழியொன்றில் சேவையில் நியமனம் பெற்ற அலுவலர் ஒருவர் தகுதிகாண் காலத்தில் அரச கரும மொழியொன்றில் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் அவசியமாகும் |

| மொழி | பெறவேண்டிய தேர்ச்சி |
|---|---|
| மற்றைய அரச கரும மொழி | அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 07/2007 ஆம் இலக்க, மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய உரிய மட்டத்தில் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் |

10. தரங்களிற்கு தரமுயர்வு வழங்குதல் : செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் தரமுயர்வு முறை நடைமுறைப்படுத்தப்படும்.

10. 1 III ஆம் தரத்திலிருந்து II ஆம் தரத்திற்கு தரமுயர்த்துதல்.

10.1.1. பொதுவான செயலாற்றுகைக்கமைய

10.1.1.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் :

(i) பதவி நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் ;

(ii) சேவை வகையில் III ஆம் வகுப்பில் குறைந்தது 10 வருடங்கள் பணிபுரிந்து மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் 10 சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தலும் ;

(iii) ஏற்றுக்கொள்ளப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுச் செயலொழுங்கிற்கு இணங்க தரமுயர்வுபெறும் தினத்திற்கு உடன் முன்னரான 10 வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனை விட உயர்ந்த செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல் ;

(iv) தரமுயர்வுத் தினத்திற்கு உடன்முன்னரான 05 வருட காலத்தில் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் ;

(v) மற்றைய அரச கரும மொழியில் உரிய மட்டத்தில் தேர்ச்சிபெற்றிருத்தல் ;

(vi) உரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல் ;

(vii) வெற்று எடை 34 அந்தர் வரையான இலகு லொறி மற்றும் 32 பயணிகளைவிட அதிகரிக்காத தொகையினரைக் கொண்டு செல்லக்கூடிய பஸ் வண்டிகளுக்கான சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருத்தல். (ஏ 1 மற்றும் சீ 1 வகுப்பிற்குரிய அனுமதிப்பத்திரத்தை அல்லது புதிய சாரதி அனுமதிப்பத்திரத்திற்கமைய பீ மற்றும் டீ 1 வகுப்பிற்குரிய அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

10.1.1. 2 தரமுயர்வு வழங்கும் முறை :

தகைமைகளைப் பூர்த்தி செய்யும் அலுவலர்களினால் உரிய மாதிரிப் படிவத்திற்கமைய திணைக்களத் தலைவர் மற்றும் அமைச்சின் செயலாளரின் ஊடாக பரிந்துரையுடன் இணைந்த பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுக்குமிடத்து இணைந்த பணிப்பாளர் நாயகத்தினால் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் திகதி முதல் நடைமுறைக்குவரும் வகையில் II ஆம் தரத்திற்கு இணைந்த பணிப்பாளர் நாயகத்தினால் தரமுயர்வு வழங்கப்படும்.

10.2 II ஆம் தரத்திலிருந்து I ஆம் தரத்திற்கு தரமுயர்வு வழங்குதல்.

10.2.1 அலுவலர்களில் சாதாரண செயலாற்றுகைக்கமைய

10.2.1.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்.

(i) சேவை வகையில் II ஆம் தரத்தில் ஆகக் குறைந்தது ஒன்பது (09) வருடங்கள் பணிபுரிந்து மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் ஒன்பது (09) சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தலும் ;

(ii) தரமுயர்வுத் தினத்திற்கு உடன் முன்னரான 05 வருட காலத்தில் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் ;

(iii) ஏற்றுக்கொள்ளப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுச் செயலொழுங்கிற்கு இணங்க தரமுயர்வுபெறும் தினத்திற்கு உடன் முன்னரான 09 வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனை விட உயர்ந்த செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல் ;

(iv) உரிய வினைத் திறன் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல் ;

(v) வெற்று எடை 34 அந்தருக்கு அதிகமான கனதியுடைய மோட்டார் வாகனங்கள் மற்றும் கனதியுடைய ட்ரேலர் மற்றும் 32 பயணிகளைவிட அதிகமானவர்களை ஏற்றிச் செல்லக்கூடிய அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள பஸ் வண்டிகளை செலுத்துவது தொடர்பாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தேர்ச்சி தொடர்பான சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும். (ஏ வகுப்பையுடைய அனுமதிப்பத்திரம் அல்லது புதிய சாரதி அனுமதிப்பத்திரத்திற்கமைய டீ வகுப்பு அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்).

10.2.1.2 தரமுயர்வு வழங்கும் முறை :

தகைமைகளைப் பூர்த்தி செய்யும் அலுவலர்களினால் உரிய மாதிரிப் படிவத்திற்கமைய திணைக்களத் தலைவர் மற்றும் அமைச்சின் செயலாளரின் ஊடாக பரிந்துரையுடன் இணைந்த பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுக்குமிடத்து இணைந்த பணிப்பாளர் நாயகத்தினால் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் I ஆம் தரத்திற்கு இணைந்த பணிப்பாளர் நாயகத்தினால் தரமுயர்வு வழங்கப்படும்.

10.3 தரம் I இலிருந்து விசேட தரத்திற்கு தரமுயர்வு வழங்குதல்.

10.3. 1 சாதாரண செயலாற்றுகைக்கமைய.

10.3.1.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் :

(i) சேவை வகையில் I ஆம் தரத்தில் ஆகக் குறைந்தது ஒன்பது (09) வருடங்கள் பணிபுரிந்து மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் ஒன்பது (09) சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தலும் ;

(ii) தரமுயர்வுத் தினத்திற்கு முன்பு 05 வருட காலத்தில் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் ;

(iii) ஏற்றுக்கொள்ளப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுச் செயலொழுங்கிற்கு இணங்க தரமுயர்வுபெறும் தினத்திற்கு முன்னரான 09 வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனை விட உயர்ந்த செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல் ;

(iv) உரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்.

10.3.1.2 **தரமுயர்வு வழங்கும் முறை** :

தகைமைகளைப் பூர்த்தி செய்யும் அலுவலர்கள் உரிய மாதிரிப் படிவத்திற்கமைய திணைக்களத் தலைவர் மற்றும் அமைச்சின் செயலாளரின் ஊடாக பரிந்துரையுடன் இணைந்தப் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுக்குமிடத்து இணைந்தப் பணிப்பாளர் நாயகத்தினால் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் விசேட தரத்திற்கு இணைந்தப் பணிப்பாளர் நாயகத்தினால் தரமுயர்வு வழங்கப்படும்.

**குறிப்பு** : சராசரி மட்டத்திலான செயலாற்றுகைக்கமைய பதவியுயர்விற்காகக் குறித்துரைக்கப்பட்ட வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சையினைச் சித்தியெய்துவதற்கு இயலாத அலுவலர்களின் பதவியுர்வுத் திகதியானது வினைத்திறன் தடைதாண்டலினைச் சித்தியெய்துவதற்கு தாமதமான காலப் பகுதிக்கு சமமான காலப்பகுதி ஒன்றினால் தாமதப்படுத்தப்படல் வேண்டும்.

11. **சேவைக்குரிய நிபந்தனைகள்** : சேவையில் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படும் அலுவலர் ஒருவர் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவதுடன் அவர் தகுதிகாண் காலத்தில் அலுவலரின் பணிகள், நடத்தை மற்றும் வரவு என்பன திருப்திகரமானதாக பேணப்பட்டும் மற்றும் முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்தும் இருப்பின் தகுதிகாண் காலத்தின் இறுதியில் சேவையில் நிரந்தரமாக்கப்படுவர்.

12. **வரைவிலக்கணம்** :

12.1 “ பிரமாணக் குறிப்பு” என்பது, அரச சேவையின் இணைந்த சாரதிகள் சேவைப் பிரமாணக் குறிப்பைக் குறிக்கின்றது.

12. 2 "சேவை" என்பது, அரச சேவையின் மோட்டார் வாகன சாரதிகள் சேவையினைக் குறிக்கின்றது.

12.3 "திருப்திகரமான சேவைக்காலம்" என்பது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கமைய வரையறுக்கப்படல் வேண்டும்.

12.4 "உயிரிப்பான சேவைக்காலம்" என்பது சொந்தப் பதவிக்குரிய சம்பளத்தைப் பெற்று உண்மையாகவே கடமையில் ஈடுபட்ட காலப்பகுதியாகும். அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட பிரசவ விடுமுறை தவிர்ந்த ஏனைய அனைத்து சம்பளமற்ற விடுமுறை காலப்பகுதிகளும் உயிரிப்பான சேவைக்காலத்திற்காக கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

13. **தரப்படுத்தல் முறையில் உள்ளீர்ப்புச் செய்தல் :**

இச்சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் தினத்தில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும். உரிய தினத்தில் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகள் மூலம் வழங்கப்பட்டுள்ள PL - 03- 2006 A சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் சம்பளம் பெறும் அனைத்து அலுவலர்களும் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உள்ளீர்ப்புச் செய்யப்படுவர்.

அந்தந்தப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட தினத்தின் அடிப்படையிலேயே பதவிக்காலம் கணிக்கப்படும். எவ்வாறெனினும் உள்ளீர்ப்புக் காரணமாக உரிய நபரின் சம்பள ஏற்றத்தினத்தில் மாற்றங்கள் ஏற்படக்கூடாததோடு, மேற்படி தினம் உள்ளீர்ப்பிற்கு முன்னர் நிலவிய சம்பள ஏற்ற தினமாக தொடர்ந்தும் அமுலிலிருக்கும். அவ்வாறே சம்பளங்கள் மாற்றப்படும் போது உரிய நபர் இறுதியாக பெற்றுக்கொண்ட சம்பளப் படிமுறைக்கு ஒத்த அடிப்படையில் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 4. 4 ஆம் பிரிவிற்கமைய அடுத்த சம்பளப்படிமுறையில் வைப்பதனை மேற்கொள்தலாகாது.

புதிய பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் தினத்தில் ,

(i) இணைந்த சாரதிகள் சேவையின் II "ஆ" வகுப்பில் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவல்கள் தரம் III இற்கு உள்ளீர்க்கப்படுவர் ;

(ii) இணைந்த சாரதிகள் சேவையின் II "அ" வகுப்பில் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவல்கள் தரம் II இற்கு உள்ளீர்க்கப்படுவர் ;

(iii) இணைந்த சாரதிகள் சேவையின் I ஆம் வகுப்பில் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவல்கள் தரம் I இற்கு உள்ளீர்க்கப் படுவர் ;

(iv) இணைந்த சாரதிகள் சேவையின் I ஆம் வகுப்பில் ஒன்பது (09) வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் ஒன்பது (09) சம்பள ஏற்றங்களைப் பெற்றுள்ள மற்றும் ஏனைய சேவைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் விசேட தரத்திற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுவர்.

14. **இடைக்கால ஏற்பாடுகள் :**

14.1 சேவைப் பிரமாணக்குறிப்பு நடைமுறைக்கு வரும் தினத்தில் பழைய பிரமாணக் குறிப்பின் கீழ் வகுப்பு I இற்கு நியமனம் பெற்றுள்ள அலுவலர்கள் தரம் I இலுள்ள வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடையும் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

14. 2 தற்போது சேவையிலுள்ள அலுவலர்கள் தொடர்பாக இப்பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகள் இசைவுறுவதற்கு பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதி முதல் மூன்று (03) வருட சலுகைக்காலம் ஒன்று வழங்கப்படும். மேற்படி காலப்பகுதியில் அவர்கள் புதிய இணைந்த சாரதிகள் சேவைப்பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும். இங்கு தகைமைகள் என்பது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் என்பதனைக் குறிக்கும்.

15. **ஏனைய விடயங்கள் :**

15.1 சகல நியமனங்கள் தொடர்பிலும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 1589/30 ஆம் இலக்க மற்றும் 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட நடைமுறைச் செயலாற்று விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்.

15.2 இப்பிரமாணக்குறிப்பில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனும் விடயம் ஒன்று தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

15.3 ஆட்சேர்ப்பு, சேவையில் அமர்த்துதல், ஒழுக்காற்று மற்றும் ஏனைய தாபன நடவடிக்கைகள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் நிபந்தனைகள்/ அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்.

15.4 சகல அலுவலர்களும் இடமாற்ற நடைமுறைகளுக்கு உட்படுவர். அவர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கு கட்டுப்பட்டிருப்பர்.

15.5 இச்சேவைப்பிரமாணக் குறிப்பின் சிங்களம், தமிழ், ஆங்கில பிரதிகளின் விடயங்களிற்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படின் சிங்களப் பிரதியே மேலோங்கும்.

**பின்னிணைப்பு 01**

1. பரீட்சையின் பெயர் : இணைந்த சாரதிகள் சேவையிலுள்ள அலுவலர்களிற்கான முதலாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை.

2. பரீட்சை தொடர்பான விபரங்கள் : தேர்ச்சி தொடர்பான செய்முறைப் பரீட்சை ஒன்றும் வாய்மொழிமூலப் பரீட்சை ஒன்றும்.

| பாடத்துறை | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|
| தேர்ச்சி தொடர்பான செய்முறைப் பரீட்சை | 50 | 20 |
| வாய்மூலப் பரீட்சை | 50 | 20 |
| மொத்தம் | 100 | 40% |

3. நடாத்தும் அதிகாரி :

* தேர்ச்சி தொடர்பான செய்முறைப் பரீட்சை :

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் கீழ்வரும் அலுவலர்களை உள்ளடக்கிய பரீட்சிப்புச் சபை ஒன்றின் மூலம்

(i) உரிய திணைக்களத்தின் நிறைவேற்றுத்துறை அலுவலர் ஒருவர் தவிசாளராக ;

(ii) மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தின் மோட்டார் வாகன பரிசோதகர் ஒருவர் ;

(iii) பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் அலுவலர் ஒருவர்.

* வாய்மொழி மூலப்பரீட்சை :

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் கீழ்வரும் அலுவலர்களை உள்ளடக்கிய பரீட்சிப்புச் சபை ஒன்றின் மூலம்.

(i) உரிய திணைக்களத்தின் நிறைவேற்றுத்துறை அலுவலர் ஒருவர் தவிசாளராக ;

(ii) உரிய திணைக்களத்திற்குப் புறம்பான திணைக்களம் ஒன்றின் நிறைவேற்றுத்துறை அலுவலர் ஒருவர்;

4. எவ்வளவு காலத்திற்கு ஒருமுறை நடாத்தப்படும் என்பது : வருடத்திற்கு இரண்டு முறை.

5. பரீட்சைக்கான பாடத்திட்டம் :

| பாடத்துறை | பாடத்திட்டம் |
|---|---|
| தேர்ச்சி தொடர்பான செய்முறைப் பரீட்சை | 1. நெடுஞ்சாலை சட்டவிதிகள் தொடர்பான பிரயோக அறிவு<br>2. மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு |

| பாடத்துறை | பாடத்திட்டம் |
|---|---|
| வாய்மொழி மூலப் பரீட்சை<br>1. தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைச் செயலாற்றுகை விதிகள் தொடர்பான அறிவு | தகுதிகாண் காலம் :<br>வினைத்திறன்காண் தடைப் பரீட்சை, மேலதிக நேரக் கொடுப்பனவு, விடுமுறைகள், புகையிரத ஆணைச் சீட்டு, கடித கொடுக்கல் வாங்கல்களிற்கான வழிமுறை, பொதுவான நடத்தைகள் மற்றும் ஒழுக்கம் |
| 2. அரச வாகனங்கள் பாவனை மற்றும் பராமரிப்புத் தொடர்பான அறிவு | * மோட்டார் வாகன சாரதிகளின் கடமைகளும் பொறுப்புக்களும்<br>* அரச வாகனங்களை பராமரித்தல் மற்றும் பாதுகாப்பு தொடர்பான சாரதிகளின் பொறுப்புக்கள்<br>* நாளாந்த ஓட்ட குறிப்பேடு<br>* வாகன இருப்புக்களைப் பேணல்<br>* வாகனங்களைத் திருத்துதல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள்<br>* அரச வாகனங்களில் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் விபத்துகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள். |

**குறிப்பு** : வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகளின் போது சகல பாடங்களிலும் ஒரே முறையில் சித்தியடைதல் வேண்டும்.

**பின்னிணைப்பு 02**

1. பரீட்சையின் பெயர் : இணைந்த சாரதிகள் சேவையிலுள்ள அலுவலர்களிற்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை

2. பரீட்சை தொடர்பான விபரங்கள் : தேர்ச்சி தொடர்பான செய்முறைப் பரீட்சை

| பாடத்துறை | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|
| தேர்ச்சி தொடர்பான செய்முறை பரீட்சை<br>1. நெடுஞ்சாலை சட்டவிதிகள் தொடர்பான பிரயோக அறிவு | 50 | 20 |
| 2. மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு | 50 | 20 |
| மொத்தம் | 100 | 40% |

3. நடாத்தும் அதிகாரி :
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் கீழ்வரும் அலுவலர்களை உள்ளடக்கிய பரீட்சிப்புச் சபை ஒன்றின் மூலம்

(i) உரிய திணைக்களத்தின் நிறைவேற்றுத்துறை அலுவலர் ஒருவர் தவிசாளராக ;

(ii) மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தின் மோட்டார் வாகன பரிசோதகர் ஒருவர்

(iii) பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் அலுவலர் ஒருவர்.

4. எவ்வளவு காலத்திற்கு ஒருமுறை நடாத்தப்படும் என்பது : வருடத்திற்கு இரண்டு முறை.

5. பரீட்சைக்கான பாடத்திட்டம் :

| பாடத்துறை | பாடத்திட்டம் |
|---|---|
| 1. நெடுஞ்சாலை சட்டவிதிகள் தொடர்பான பிரயோக அறிவு<br>2. மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு | இத்துறை தொடர்பாக கடந்த சேவைக்காலத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ள நடைமுறை விதிகள், சட்ட ரீதியான மாற்றங்கள் மற்றும் அலுவலரின் திறன் அடிப்படையிலான தேர்ச்சி என்பவை மேற்படி அலுவலரின் சேவை மூப்பிற்குப் பொருந்தும் வகையில் விருத்தி அடைந்துள்ளதா என்பதனை அளவிடுதல் மேற்கொள் ளப்படும் |

**பின்னிணைப்பு 03**

1. பரீட்சையின் பெயர் : இணைந்த சாரதிகள் சேவையிலுள்ள அலுவலர்களிற்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை .

2. பரீட்சை தொடர்பான விபரங்கள் : தேர்ச்சி தொடர்பான செய்முறைப் பரீட்சை :

| பாடத்துறை | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|
| தேர்ச்சி தொடர்பான செய்முறை பரீட்சை<br>1. நெடுஞ்சாலைகள் சட்டவிதிகள் தொடர்பான பிரயோக அறிவு | 50 | 20 |
| 2. மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு | 50 | 20 |
| மொத்தம் | 100 | 40% |

3. நடாத்தும் அதிகாரி :
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் கீழ்வரும் அலுவலர்களை உள்ளடக்கிய பரீட்சிப்புச் சபை ஒன்றின் மூலம்

(i) உரிய திணைக்களத்தின் நிறைவேற்றுத்துறை அலுவலர் ஒருவர் தவிசாளராக ;

(ii) மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தின் மோட்டார் வாகனப் பரிசோதகர் ஒருவர்

(iii) பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் அலுவலர் ஒருவர்.

4. எவ்வளவு காலத்திற்கு ஒருமுறை நடாத்தப்படும் என்பது : வருடத்திற்கு இரண்டு முறை.

5. பரீட்சைக்கான பாடத்திட்டம்

| பாடத்துறை | பாடத்திட்டம் |
|---|---|
| 1. நெடுஞ்சாலைகள் சட்டவிதிகள் தொடர்பான பிரயோக அறிவு<br>2. மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் தொடர்பான அடிப்படை அறிவு | நெடுஞ்சாலைகள் சட்டவிதிகள் மற்றும் மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் தொடர்பான அறிவிற்கு புறம்பாக அலுவலரின் திறன் அடிப்படையிலான தேர்ச்சி என்பன மேற்படி அலுவலரின் சேவை மூப்பிற்குப் பொருந்தும் வகையில் விருத்தி அடைந்துள்ளதா என்ப தனையும் மற்றும் அலுவலர் பணிபுரியும் நிறுவனத்திடம் ஒப்படைக் கப்படும் பணிகள் தொடர்பாக போதிய அறிவினைப் பெற்றுக் கொண்டுள்ளாரா என்பதனையும் அளவிடுதல் மேற்கொள்ளப் படும் |

8- 1059

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.